# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No. 88/2015
Deposition of Witness for Prosecution PW-12
Name :டாக்டர் பன்னீர்செல்வம்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 7th day of November- 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது சேலம் அன்னபூரணா மருத்துவக்கல்லூரில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் தலைமை பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20-10-2013 அன்று சேலம் அரசுமோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றும் போது அன்று காலை 11-50 மணியளவில் கன்னங்குறிச்சி ஆய்வாளர் வேண்டுகோளுடன் இறந்த ராமகிருஷ்ணன் வயது 60 என்பவரின் பிரேதம் சடலக்கூராய்விற்காக முன்னிலைப்படுத்தப்பட்டது. மேற்படி நபர் மேற்படி காவல் நிலைய குற்ற எண் 261/2013 வழக்கில் சம்மந்தப்பட்டதாகும். இறந்த நபரின் உடலை மு.நி.கா. திரு. முருகேசன் அவர்கள் அடையாளம் காட்டினார். நான் மேற்படி இறந்தவரின் சடலத்தின் மீது சடலக்கூராய்வினை மதியம் 12-00 மணிக்கு ஆரம்பித்தேன். அவரது உடலின் மரண விறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. அவர் சாதாரண உடல் வளர்ச்சியுடன் காணப்பட்டார். அவரது உடலில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள்.

1.அடர் பழுப்பு நிற ஒரு சிராய்ப்பு காயம் 3.5 x 0.1 செ மீ அளவில் இடது புற தாடையின் மேல் பகுதியில் காணப்பட்டது. 2. ஒரு சிராய்ப்பு காயம் 1 x 0.2 செ மீ அளவில் இடது புற காதுக்கு கீழே காணப்பட்டது.3. ஒரு சீரான வெட்டுக்காயம் இடது புற தாடை பகுதியில் 2.5x 0.2 செ மீ அளவில் காணப்பட்டது. 4. ஒரு குத்து காயம் இடது புற கழுத்து பகுதியின்

நடுபகுதியில் 4 x 1.5 x 6 செ மீ அளவில் காணப்பட்டது. இந்த காயம் இடது பாதத்திலிருந்து 152 செ மீ மேலேயும் மற்றும் இடது புற காது எலும்பு பகுதிக்கு 9 செ மீ கீழேயும் காணப்பட்டது. 5. ஒரு குத்து காயம் இடது கழுத்தின் கீழ் பகுதியில் 4 x 1.5 x 5.5 செ. மீஅளவில் காணப்பட்டது. இந்த காயம் இடது பாதத்திலிருந்து 146 செ மீ க்கு மேலேயும் காயம் எண் 4க்கு 5.5 செ மீ க்கு கீழேயும் காணப்பட்டது. 6. ஒரு சீரான வெட்டுக்காயம் கழுத்தின் நடுப்பகுதியில் 2 x 0.5x 0.5 செ மீ அளவில் காணப்பட்டது. இந்த காயம் காயம் எண் 5க்கு 1.6 செ மீ மேலே காணப்பட்டது. 7. ஒரு குத்துக்காயம் கழுத்தின் மேல்பகுதியில் 1.5x 0.5 x 0.5 செ மீ அளவில் காணப்பட்டது. 8. ஒரு கிழிந்த காயம் வலது புற காரை எலும்பிற்கு மேல் 2 x 0.5 x 0.5 செ மீ அளவில் காணப்பட்டது.

9. வலது புற முதுகு பகுதியின் மேல் பகுதியில் ஒரு குத்து காயம் 2 x 0.5x 3 செ மீ அளவில் காணப்பட்டது. 10. ஒரு சீரான வெட்டுக்காயம் நடு தலையின் பின்பகுதியில் 6 x 0.5x எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. இந்த காயம் இரண்டு புருவங்களின் மையப்பகுதியிலிருந்து 15 செ மீ மேலேயும் ஆஸிபிட்டல் புடைப்பிலிருந்து 11 செ மீ மேலேயும் காணப்பட்டது. 11. ஒரு வி வடிவிலான சீரான வெட்டுக்காயம் இடது புற தலையின் நடுபகுதியிலும் பின்பகுதியிலும் 6 x 0.5 x எலும்பின் ஆழம் வரையும் மற்றும் 5 x 0.5 x எலும்பின் ஆழம் வரையும் காணப்பட்டது.இந்த காயம் புருவத்தின் மையப்பகுதியிலிருந்த 21 செ மீ மேலேயும் ஆஸ்பிட்டல் புடைப்பிலிருந்து 9 செ மீ க்கு மேலேயும் காணப்பட்டது. 12. ஒரு கிழிந்த காயம் தலையின் பின்புறத்தில் ஆஸிபிட்டல் புடைப்பின்மேலே 6.5 x 0.5 ஒ எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது..13 ஒரு கிழிந்த காயம் வலது புற முதுகு பகுதியின் பின்பகுதியில் மேல்பகுதியில் 2 x 0.5 x 0.5 செ மீ அளவில் காணப்பட்டது-, இறந்த நபரின் நகங்கள் நீலநிறத்தில் காணப்பட்டது. தலையை கூராய்வு செய்து பார்த்த போது கபாலத்தின் மேல் உள்ள தோளின் அடிப்படையில் இடது புற பக்கவாட்டில் ஒரு கன்றிய காயம் 9x 8 x 0.5 செ மீ அளவில் காணப்பட்டது. மற்றும் இடதுபுற டெம்ராய்டிஸ் சதைப்பகுதி கன்றி காணப்பட்டது. கபால எலும்புகளில் இடது புற தலையின் நடுப்புறம் உள்ள பாகத்தில் ஒரு எலும்பு முறிவு 11 x 2 செ மீ அளவில் காணப்பட்டது. மற்றும் ஒரு குவிந்த எலும்பு முறிவு தலையின் நடுப்பகுதியில் 14 x 7 செ மீ அளவில் காணப்பட்டது. மூளைப்பகுதியை கூராய்வு செய்து பார்த்த போது மூளையின் இருபகுதியிலும் இரத்தக்கசிவு காணப்பட்டது. மார்பு கூட்டினை கூராய்வு செய்து பார்த்ததில் விலா எலும்புகளில் முறிவுகள் எதுவும் இல்லை. இருதயம் சாதாரண அளவுகளில் அறைகள் காலியாகவும் காணப்பட்டது. நுரையீரல் வெட்டுப்பாகம் வெளிறி காணப்பட்டது., கழுத்தினை ஆய்வு செய்யும்போது இடது புற ஸ்டெர்னோமேஸ்ட்ராய் தசைப்பகுதி கன்றி 2.5 x 0.5. செ மீ அளவில் காணப்பட்டது. மற்றும் ஒரு கன்றிய காயம்

வலது புற ஸ்டெர்னோமேஸ்ட்ராய் தசைப்பகுதியில் 8x 2 x 0.5 செ மீ அளவில் காணப்பட்டது. இடது புற ரிப்பன் சதைகளில் கன்றிய காயம் 8x 8 செ மீ அளவில் காணப்பட்டது. மூச்சுக்குழலில் வெட்டினால் ஏற்படும் காயம் காணப்பட்டது. நாவலடி எலும்பு நன்றாக இருந்தது. வயிற்றை ஆய்வு செய்த போது இரைப்பையில் 200 கிராம்அளவில் பாதி செறிக்கப்பட்ட அரிசி உணவு பழுப்பு நிறத்தில் குறிப்பிட்ட வாடை எதுவுமின்றி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், மற்றும் சிறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டது., சிறு நீரக பை காலியாக காணப்பட்டது. பிறப்புறுப்பில் காயங்கள் எதுவும் இல்லை. இடுப்பெலும்பு தண்டுவடம் நன்றாக இருந்தது. உள் உறுப்புக்களை சேகரிக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதில் Pheniramine Maleate என்ற வேதிப்பொருள் காணப்பட்டது.இறந்த நபர் நான் சடலக்கூராய்வு தொடங்குவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்தேன். இறந்த நபருக்கு தலை மற்றும் கழுத்தில் ஏற்பட்ட காயங்களின் விளைவாலும் அதிர்ச்சியாலும்இரத்தப்போக்கினாலும் அவர் இறந்திருக்கக்கூடும் என்றும் இறந்த நபர் இறப்பிற்கு முன்பாக மேற்கூறிய வேதிப்பொருளை சாப்பிட்டு இருக்கிறார் என்றும் கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட சடலக்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ 20. எனது இறுதி கருத்து அ.,சா.,ஆ 21. என்னால் பெறப்பட்ட சடலக்கூராய்விற்கான வேண்டுகோள் அ.சா.,ஆ 22. மேற்கூறிய காயங்கள் என்னிடம் காட்டப்படும் கத்தி, வீச்சரிவாள், மரப்பலகை, இரும்பு ராடு, உருட்டுக்கட்டை ஆகியவற்றால் தாக்கப்படும்போது ஏற்பட வாய்ப்புண்டு.

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அதே தினம் 12-55 மணியளவில் இறந்த ராஜசேகர் என்பவரின் பிரேதம் சடலக்கூராய்விற்காக மேற்படி ஆய்வாளரின் வேண்டுகோளுடன் த,.கா இளங்கோவன் என்பவரால் ஆஜர்படுத்தி அடையாளம் காட்டப்பட்டது. அவரது உடலை அன்றைய தினம் பகல் 2-00 மணியளவில் நான் சடலக்கூராய்வு செய்ய ஆரம்பித்தேன். அந்த சமயத்தில் மரண விறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது., அவர் சாதாரண வளர்ச்சிஉடையவராக 32 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதமாகும் அவரை பரிசோதனை செய்ததில் 3.7 x 1.2 x 8 செ மீ அளவில் ஒரு குத்துக்காயம் கழுத்தின் இடது பக்கத்தில் நீளவாக்கில் காணப்பட்டது. 2. மற்றொரு குத்துக்காயம் 2x 1.5 x 4 செ மீ அளவில் கியாவிகுலாபகுதியில் காணப்பட்டது. மற்றொரு குத்து காயம் வலது கியாவிகுலா பகுதியில் 2x 1.5 x 4 செ மீ அளவில் காணப்பட்டது. கபாலத்தை சோதித்து பார்த்த போது பிரெண்டோ பிரைட்டல் டெம்போரல் பகுதியில் 30 x 20 x 0.5 செ மீ அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. சுக்கலான ஒரு எலும்பு முறிவு இடது டெம்பரல் பகுதியில்

11x 7 செ மீ அளவில் காணப்பட்டது. அதில் 15 செ மீ நீளத்திற்கு எலும்பு இணைப்பு பகுதியில் காணப்பட்டது. அவருக்கு மேற்படி பகுதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தது. இடது டெம்போரல் பகுதியில் கன்றிய கிழிந்த காயம் 5 x 4 செ மீ அளவில் கபாலத்தின் அடிப்பகுதியில் எலும்பு முறிவுடன் 11.5 செ மீ நீளத்திற்கு காணப்பட்டது. விலா எலும்புகளில் முறிவு எதுவும் காணப்படவில்லை., இருதயம் காலியாக காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் , நுரையீரல் ஆகியவை வெளிறி நார்மலாக காணப்பட்டது. கழுத்து பகுதியில் 2.5 x 0.5 x சதையின் ஆழப்பகுதிவரை ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. கழுத்து பகுதியின் கிளீரோ சவ்வு பகுதியில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. நாவலடிஎலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது., இரைப்பையில் 150 கிராம்அளவில் பகுதியாக செறித்த கருமை நிற உணவு குறிப்பிடத்தக்க வாடை எதுவுமின்றி காணப்பட்டது., சிறுநீரகம் வெளிறி காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. பிறப்புறுப்பில் காயங்கள் காணப்படவில்லை. முதுகு எலும்பு மற்றும் தண்டுவடம் ஆகியவை நல்ல நிலையில் காணப்பட்டது. உடல் உறுப்புகள் இரசாயன பகுப்பாய்விற்கு சேகரிக்கப்பட்டுஅனுப்பப்பட்டது. இரசாயன பரிசோதனையில் **Pheniramine Maleate** என்ற வேதிப்பொருள் காணப்பட்டது., மேற்படி நபர் எனது சடலக்கூராய்விற்கு முன்பாக 26 முதல் 28 மணி நேரத்திற்குள் இறந்திருக்க வாய்ப்புள்ளது என்று கருத்துதெரிவித்து சடலக்கூராய்வு அறிக்கை அனுப்பினேன்.அது அ.சா.ஆ 22 . மேற்படி நபர் தனக்குஏற்பட்ட தலை மற்றும் கழுத்து பகுதியில் ஏற்பட்ட காயங்களின் விளைவாலும்மேற்கூறிய வேதிப்பொருள் உட்கொள்ளப்பட்டதாலும்அதிர்ச்சியினாலும் இரத்தப்போக்கினாலும் இறந்திருக்க வாய்ப்புள்ளது என்று கருத்துதெரிவித்து இறுதி கருத்து சான்று வழங்கினேன். அது அ.,சா.ஆ 23 ஆகும்.மேற்படி நபரின் சடலக்கூராய்விற்காக என்னால் பெறப்பட்ட வேண்டுகோள் அ.சா.ஆ 24. என்னிடம் காட்டப்படும் கத்தி, வீச்சரிவாள், மரப்பலகை, இரும்பு ராடு, உருட்டு கட்டை ஆகிய ஆயுதங்களால் தாக்கப்பட்டால் மேற்கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)

ராஜசேகருக்கு ஏற்பட்டுள்ள வெளிப்புற காயங்கள் அனைத்தும் குத்துக்காயங்கள் ஆகும். அவைகள் அனைத்தும் கூர்மையான நுனி பகுதியை உடைய ஆயுதத்தால்மட்டுமே ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்படி இறந்த இரண்டு நபர்களின் இரைப்பையில் பகுதியாக செறித்த உணவு காணப்பட்டது. அந்த உணவை மேற்படி இருவரும் இறப்பதற்கு சுமார் 1 முதல் 2 மணி நேரத்திற்குள்ளாக உட்கொண்டிருக்ககூடும் என்பது சரிதான். ராமகிருஷ்ணன் என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கூர்மையான மற்றும் முனை மழுங்கிய

ஆயுதங்களால் தாக்கப்படுவதால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். அவில் மாத்திரை சாப்பிட்டால் ஒருவருக்கு மயக்கம் ஏற்படுமா என்றால் இல்லை தூக்கம் தான் வரும். இரண்டு நபர்களுக்கும் இரத்தப்போக்குஅதிகளவில் இருப்பதாக கூறும் நிலையில் அவர்களுக்குஇறப்பு உடனடியாக ஏற்பட்டிருக்கும் என்றால் காயங்கள் ஏற்பட்ட பின்னர் 1 மணி நேரம் வரை உயிருடன் இருக்க வாய்ப்புள்ளது.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Dr.Panneerselvam Sd/- III ADJ Salem.

<u>DEPOSITION OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, <u>SALEM.</u>

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.88/2015
Deposition of Witness for Prosecution PW 13
Name :திருமதி. கீதா
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 7th day of November- 2019.

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21-10-2013 அன்று நான் அறிவியல் அலுவலராக பணிபுரிந்த போது கன்னங்குறிச்சி கா.நி. கு. எண். 261/2013 வழக்கில் இறந்து போன ராமகிருஷ்ணன் என்பவரின் உடலிலிருந்து சேகரிக்கப்பட்டஉடல் உள் உறுப்புக்களை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சேலத்திலிருந்து வேண்டுகோளுடன் பகுப்பாய்விற்காக பெறப்பட்ட பொருட்களின் விபரங்கள். 1. இரைப்பை மற்றும் அதனை சார்ந்த பொருட்கள்.2. குடல் மற்றும்அதனை சார்ந்த பொருட்கள். 3. கல்லீரல் மற்றும் சிறுநீரகம். 4. மூளை. 5. ரத்தம். 6. உடல் உள் உறுப்புக்களை பதப்படுத்த பயன்படுத்திய திரவம். 1 முதல் 5 வரையான உடல் உள் உறுப்புகளில் Pheniramine Maleate என்ற Anti Histamine என்ற வகையை சார்ந்த மருந்து காணப்பட்டது. பதப்படுத்தப்பட்ட திரவத்தில் வேதிப்பொருள் எதுவும் கண்டறியப்படவில்லை. மேற்படி இரசாயன பொருள் ஜலதோஷம் மற்றும் ஒவ்வாமை போன்ற வியாதிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒரு மருந்தாகும். மேற்கூறிய கருத்து குறித்து ஆய்வறிக்கை வழங்கினேன், அது அ.சா.ஆ 26.

அதே தினம் இறந்து போன ராஜசேகர் என்பவரின் உடலிலிருந்து சேகரிக்கப்பட்டஉடல் உள் உறுப்புக்களை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சேலத்திலிருந்து வேண்டுகோளுடன் பகுப்பாய்விற்காக பெறப்பட்ட பொருட்களின் விபரங்கள்.

1. இரைப்பை மற்றும் அதனை சார்ந்த பொருட்கள்,.2. குடல் மற்றும்அதனை சார்ந்த பொருட்கள். 3. கல்லீரல் மற்றும் சிறுநீரகம். 4. மூளை. 5. ரத்தம். 6. உடல் உள் உறுப்புக்களை பதப்படுத்த பயன்படுத்திய திரவம்., 1 முதல் 5 வரையான உடல் உள் உறுப்புகளில் Pheniramine Maleate என்ற Anti Histamine என்ற வகையை சார்ந்த மருந்து காணப்பட்டது. பதப்படுத்தப்பட்ட திரவத்தில் வேதிப்பொருள் எதுவும் கண்டறியப்படவில்லை. மேற்படி இரசாயன பொருள் ஜலதோஷம் மற்றும் ஒவ்வாமை போன்ற வியாதிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒரு மருந்தாகும். மேற்கூறிய கருத்து குறித்து ஆய்வறிக்கை வழங்கினேன், அது அ.சா.ஆ 27. ஆய்வாளர் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை..இல்லை.

Sd/- Tmt.Geetha Sd/- III ADJ Salem.